தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 6, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 23, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின் வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள்.

666—(*வினா எண் 4091) திரு. ஆர். ரெங்கசாமி மற்றும் திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் (Contract Labourers) எத்தனை பேர் பணி செய்கிறார்கள் ?

(ஆ) இவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் உற்பத்தி கட்டுமான பணிகளிலும் மின் உற்பத்தி நிலையங்களிலும், கிராமப்புறங்களை மின்மயமாக்கும் ஏற்பாடுகளிலும், சுமார் 15,700 ஒப்பந்தத் தொழிலாளர்கள்

நிரந்தரமில்லா வேலைத்தன்மையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது தவிர தனியார் அமைப்புகள் காவல் பணிக்காக அமர்த்தப் பட்டு அவர்களின் கீழ் சுமார் 1,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே Linemen jobs, Wiremen jobs Mazdoors, Helpers போன்ற பணிகளில் எல்லாம் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். முன்பு எல்லாம் ஹெல்ப்பர் என்ற ஒரு கேட்டகிரி இருந்தது. அதை இப்போது எடுத்து விட்டார்கள். அந்த கேட்டகிரி பர்மனென்டாக இருந்தது. இப்போது அந்த ஹெல்ப்பர் வேலையை இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் செய்கிறார்கள். எனவே இவர்கள் பார்ப்பது நிரந்தர வேலை. எனவே நிரந்தரமான பணியை இவர்களுக்குக் கொடுக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்து நிரந்தரம் ஆக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறையைப் பொறுத்த வரையில் ஒரு குழுவைப் போட்டு அது ஆய்வு செய்து வருகிறது. அநேகமாக அதனுடைய பரிந்துரைகள் விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி கிடைத்த பிறகு எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு எடுக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. 4 ரூபாய், 5 ரூபாய் என்று கொடுக்கப் படுகிறது. நம்முடைய அரசு கொடுக்கும் சம்பளத்திற்குக் குறைவாக அதாவது மினிமம் வேஜஸ் என்று சொல்லக்கூடிய சம்பளத்தைவிட குறைவாகக் கொடுக்கிறார்கள். எனவே அதை ஆராய்ந்து அதிகரிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 6/

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி ஆவன செய்யப்படும்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரம் ஆக்கப்படாத தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் அவர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், வசதி எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று அண்மையில் டெல்லி உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கூறியது மாண்புமிகு மின்துறை அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய நான் ஆசைப்படுகிறேன். இதிலே அரசு ஒரு மாடல் எம்ப்ளாயியாக இருக்க வேண்டும். தனியார் துறைக்கு எடுத்துக் காட்டாக அரசு இருக்கவேண்டும். பல்வேறு தீர்ப்புகளில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம கூலி வழங்கவேண்டும் என்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்றும் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. ஆனால் மின்வாரியத்தில் அதை எல்லாம் அமல் செய்வதற்குப் பதிலாக 15,700-க்கு மேற்பட்ட கான்டிராக்ட் தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கும் டெல்லி உச்ச நீதிமன்றம் சென்றுதான் நாங்கள் நியாயம் பெற வேண்டுமா அல்லது அரசு மீண்டும் இதை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே தற்காலிகத் தொழிலாளர்களை நியமித்து வேலை வாங்குவது என்பது ஒன்று. ஒப்பந்த தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குவது என்பது வேறு. உச்ச நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு சிந்தன் போன்றவர்கள் இதிலே கண்ணும் கருத்துமாக இருந்து அவ்வப்போது அந்தத் தீர்ப்பை கவனித்து எங்களுக்குத் தகவல் தெரிவிக்கின்றபோது நாங்கள் நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கிறோம்.

அடுத்து மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் நிரந்தரமான பணிகளில் தற்காலிகமாக வேலை புரிபவர்கள் ஒன்று. தற்காலிகமான வேலைகளில் தற்காலிகப் பணியாளர்களாக பணிபுரிபவர்

களை நிரந்தரப்படுத்துவது என்பது இயலாது. ஆதலால் இது பற்றி விரைவாக ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் மின் வாரியத்தில் வேலை கொடுத்துள்ள கணக்குப்படி 15,700 பேர் இப்படி ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அங்கே நிரந்தரப் பணியிடங்கள் எத்தனை இருக்கிறதோ, அந்தப் பணியிடங்களுக்கு நிரந்தரமான ஆட்களை வைத்து இருக்கிறார்கள். கட்டுமானப் பணிகள் என்பது நிரந்தரம் அல்ல என்றார். இந்தக் கேள்வியே, நிரந்தரம் அல்லாத பணி என்பது சரியல்ல என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். ஆனால் மின்சாரம் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. சிறு சிறு கிராமங்களுக்குக் கூட போய்க்கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் எத்தனையோ கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய லைன்கள் போடப்பட்டிருக்கின்றன. டிரான்ஸ்பார்மர்கள் பல புதிதாக போடப்பட்டிருக்கின்றன. அப்படி இந்தப் பணிகளை எல்லாம் காண்டிராக்ட் தொழிலாளர்களாகிய அவர்கள் செய்கிறார்கள். நிரந்தரக் களப்பணிகளின் பணிகளைச் செய்கிறார்கள். வெறும் கட்டுமானப் பணிகள் மட்டுமல்ல. குறைந்த தொழிலாளிகளை வைத்து நிரந்தர வேலை வாங்குவது என்ற லைனிலிருந்து மாற்றி ஆட்கள் குறைக்கப்பட்டுள்ளார்களா, இல்லையா? இப்போது அமைச்சர் சொன்ன மாதிரி அந்த ஆய்வுக் குழுவினுடைய பரிந்துரைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, எத்தனை நிரந்தர ஜாப் இருக்கிறதோ அத்தனையிடங்களிலும் நிரந்தரத் தொழிலாளர்களை அமர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகளில் பொதுவாக அவர்கள் தற்காலிகப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மெயிண்டனென்ஸ் என்று சொல்லப்படும் பராமரிப்புப் பிரிவிலே நிரந்தரமான பணிகளைப் பொறுத்தவரையில், வெற்றிடங்கள் இருக்குமானால் நிச்சயமாக மின் வாரியம் அதைப்பற்றி முடிவெடுக்கும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே இதுபோன்ற பணி புரிகிற கான்ட்ராக்ட் லேபரர்ஸ் எத்தனை ஆண்டுக்காலமாக பணிபுரிந்து வருகிறார்கள், அவர்களிடம் எந்தத்தன்மையான வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற வகையில் மின் தொடர்புக் கம்பிகளை நிர்மாணிப்பது கட்டுமானப் பிரிவு. அதேபோல் மின் உற்பத்தி நிறுவனங்களில் 'கோல் ஹாண்ட்லிங், ஆஷ் ஹாண்ட்லிங்' போன்றவைகளில் நியமிக்கப்படுகிறார்கள். எத்தனை ஆண்டுக்காலம் என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

கடலூரில் அனல் மின் நிலையம்.

667—(* வினா எண் 9073) **திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் துவங்க இருக்கும் புதிய அனல் மின் நிலையம் எவ்வளவு ஏக்கர் நிலப் பரப்பளவில் எவ்வளவு செலவில் உருவாகிறது ?

(ஆ) அதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின்சாரம் பெற முடியும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ரூ. 630 கோடி மதிப்பீட்டில் 800 ஹெக்டேர் (2000 ஏக்கர்) நிலப் பரப்பில் முதல் கட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளும், இரண்டாவது கட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகளும், இறுதிக் கட்டத்தில் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் கொண்ட மேலும் இரண்டு பிரிவுகளும் கொண்ட அனல் மின்நிலையம் அமைக்க மின்வாரியம் திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS